

**Crossian Resonance**

**A Multidisciplinary Research Journal** **ISSN 0976-5417**
(A refereed Biannual Published in June and December)
**Vol. 15, No.2, December 2024**
**https://research.holycrossngl.edu.in/**

# முல்லைப்பாட்டில் திணைக்கோட்பாடு

**தேன்மொழி செ.**
தமிழ்த்துறை, ஹோலிகிறாஸ் கல்லூரி(தன்னாட்சி), நாகர்கோவில் - 629 004
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627 012

**கட்டுரைச் சுருக்கம்**

*தமிழின் பழம்பெருமைக்குச் சான்று பகரும் தொல்காப்பியமும் சங்கஇலக்கியங்களும் இண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழரின் முதல் இலக்கண இலக்கிய நூல்களாகும். தொல்காப்பிய இலக்கணத்தின் அடிப்படையில் அமைந்துள்ள இலக்கியங்கள் தான் சங்க இலக்கியங்கள். சங்க இலக்கிய வகைமைகளில் ஒன்றான பத்துப்பாட்டு இலக்கியங்களில் ஒன்று முல்லைப்பாட்டு. நப்பூதனாரால் பாடப்பட்ட இவ்அகப்பாடல் 103 அடிகளைக் கொண்டதாகும். ஐந்திணைகளில் ஒன்றான முல்லைத்திணையில் அமையப்பெற்ற இப்பாடல் அகக்கோட்பாட்டுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.*

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் முழுவதும் முல்லைத்திணையை மையமாக வைத்துப் படைக்கப்பட்ட இலக்கியம் பத்துப்பாட்டில் இடம்பெற்ற முல்லைப்பாட்டாகும். ஐந்திணை உரிப்பொருட்களில் கற்புக்குரியதாகக் கொண்டாடப்படுவது முல்லைத்திணைக்குரிய இருத்தலாகும். இத்தகைய சிறப்புக்குரிய முல்லைத் திணையில் அமையப்பெற்ற முல்லைப்பாட்டு அகத்திணைக் கோட்பாட்டுக்குப் பொருந்தியுள்ள விதத்தைக் கண்டறிவதே கட்டுரையின் நோக்கமாகும்.

## அகத்திணைக் கோட்பாடு

அகத்திணைக்குரிய கோட்பாடுகளுள் முதன்மையானதும் மிக முக்கியமானதுமான ஒன்று பாட்டுடைத் தலைவர்கள் பெயர் குறிப்பிடப்படக்கூடாது என்பதாகும். இதனை

மக்கள் நுதலிய அகனைந் திணையும்
சுட்டிஒருவர் பெயர்கொளப் பெறாஅர் (தொல்-57)

எனும் நூற்பா வாயிலாக அறியலாம். அக இலக்கண மரபாகிய தலைமக்கள் பெயர் சுட்டலாகாது என்பதன் அடிப்படையில் முல்லைப்பாட்டில் ஓரிடத்தில் கூட தலைவன், தலைவியின் பெயர் சுட்டப் பெறவில்லை.

## முதற்பொருள்

ஒத்த தலைவன் தலைவியிடையிலான அன்பைப் பற்றிக் கூறும் ஐந்திணைகளை முதல், கரு, உரிப் பொருள் என்று மூன்றாகப் பிரித்தனர். அவற்றுள்

நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே (நூற்பா-8)

என்று நம்பியகப்பொருளில் முதல் பொருள் வரையறுக்கப்படுகின்றது. முல்லைப்பாட்டின் தொடக்கமே முதல்பொருளைச் சுட்டுவதாக அமைந்துள்ளது.

நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்

***Corresponding Author:** **thenmozhi.s@holycrossngl.edu.in*** 

பாடு இமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி
பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை (3-6)

எனும் பாடலடிக்கு ஒலிக்கின்ற குளிர்ந்த கடலின் நீரைக் குடித்து, வலமாய் எழுந்து, மலைகளில் தங்கிப் பின்பு உலகத்தை வளைத்துக் கொண்டு எழுந்த மேகமானது பெருமழை பெய்த மழைக்காலம் என்று பொருள். இதில் முல்லை நிலத்தின் பெரும் பொழுதான கார்காலமும் சிறுபொழுதான மாலையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

செறியிலைக் காயா வஞ்சன மல
முறியிணர்க் கொன்றை றநன் பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி (93-97)

என்று கார்காலம், மாலைக்காலத்தின் தன்மையும் இயல்பும் கூறி முல்லைநிலத்தை கண்முன் நிறுத்துகின்றார் நப்பூதனார்.

**கருப்பொருள்**

முதற்பொருளாகிய நிலத்தையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் பொருள்களே கருப்பொருள்கள். இவை ஐவகை நிலத்திற்கும் இயற்கையாய் அமைந்தவை ஆகும்.

ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு
ஊர்நீர் பூ மரம் உணா பறை யாழ் பண்
தொழில் எனக் கருஈர் எழுவகைத்து ஆகும் (நூற்பா- 19)

என்று நம்பியகப்பொருள் கருப்பொருளைப் பட்டியலிடுகிறது. கருப்பொருளில் முதலில் இடம்பெறுவது தெய்வம் ஆகும்.

மாயோன் மேய காடுறை உலகம் (தொல்.-5)

என்று தொல்காப்பியர் முல்லை திணைக்குரிய நிலத்தைக் வரையறுக்கும் போது தெய்வம் சுட்டப்பட்டுள்ளதைப் போன்று

நனந்தலை யுலகம் வளைஇ நேமியோடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல (1-3)

எனும் அடிகளில் முல்லை நிலக்கடவுளான திருமால் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். முல்லைத்திணைக்குரிய மக்களைத் தொல்காப்பியர் பின்வருமாறு பட்டியலிடுகின்றார்.

ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப் பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே (தொல்.- 20)

என்கின்றார். நப்பூதனார் முல்லைப்பாட்டில்

உறுதுயர் அலமர னோக்கி யாய் மகள்
அடுங்குசுவ வசைத்த கையள் (13-14)

என்று முல்லைநில மக்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். மேலும் முல்லைப்பாட்டில்

நாழி கொண்ட நறுவீ முல்லை

அரும்பு அவிழ் அலரி தூஉய்க் கைதொழுது (9-10)

கோடற் குளிமுகை யங்கை யவழி (95)

எனும் பாடலடிகளில் முல்லைத்திணைக்குரிய மலராகிய முல்லை இடம்பெற்றுள்ளதைக் காணலாம். மேலும் முல்லைத்திணைக்குரிய விலங்குகளில் ஒன்றான மான் பற்றி

திரிமருப் பிரலையொடு மடமானுகள(99)

என்று முல்லைப்பாட்டில் குறிப்புள்ளதைக் காணமுடிகின்றது. இவை மட்டுமன்றி முல்லைத் திணைக்குரிய உணவு, நீர், தொழில் போன்றவையும் முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகின்றது. முல்லைத்திணை உணவுகளில் ஒன்று வரகு ஆகும். இதைப்பற்றி

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற் (98)

என்று முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ளது. முல்லைநில மக்களான கோவலரின் தொழில்களில் ஒன்று ஆநிரை மேய்த்தலாகும்.

கொடுங்கோல் கோவலர் பின்னின் றுய்த்தர (15)

என்னும் அடியில் முல்லைநில மக்களைக் குறிப்பிட்டதுடன் அவர்தம் தொழிலையும் பதிவுசெய்துள்ளார் ஆசிரியர் நப்பூதனார். மேலும் முல்லைநில மக்களின் நீராதாரங்களில் ஒன்று கான்யாறு என்பதையும் தன் பாடலடிகளில் பதிவு செய்துள்ளதைக் காணலாம்.

கான்யாறு தழீஇய அகனொடும் புறவு (24)

இவ்வாறு முல்லைத்திணைக்குரிய கருப்பொருளான தெய்வம், மக்கள், மலர், விலங்கு, உணவு, தொழில் போன்றவை முல்லைப்பாட்டில் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

**உரிப்பொருள்**

முல்லைக்குரிய உரிப்பொருள் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் ஆகும். போர், தூது, கல்வி, பொருளீட்டல் போன்ற காரணங்களுக்காகப் பிரிந்து சென்ற தலைவனின் வருகைக்காக மனவேதனையுடன் காத்திருத்தல் எனும் பொருள்படுகின்றது. முல்லைப்பாட்டு முழுவதும் உரிப்பொருளை மையமிட்டே படைக்கப்பட்டுள்ளது. போருக்குச் சென்ற தலைவனை எண்ணி வருந்திக் கொண்டிருந்த தலைவியிடம் பெருமுதுப்பெண்டிர்

வருதல் தலைவர் வாய்வது நீநின்

பருவரல் எவ்வம் களை மாயோய் எனக்

காட்டவும்காட்டவும் காணாள் கலுழ் சிறந்து

பூப்போல் உண்கண் புலம்ப முத்து உறைப்ப (20-23)

என்று தேற்றுகின்றனர். தலைவன் விரைவில் திரும்பி வருவான் கவலைப்படாதே உனது துன்பத்தைக் களைவாயாக என்று ஆறுதலளித்தும் தேறுதலடையாதத் தலைவியின் மலர் போன்ற கண்களில் முத்துப் போன்று கண்ணீர் துளிகள் வெளிப்பட அவள் தலைவனின் வருகைக்காக ஆற்றியிருக்கின்றாள். பெருமுதுப்பெண்டிர் தலைவிக்கு ஆறுதல் கூறும் இப்பகுதி தலைவியின் உளக்கிடப்பை தெள்ளிதின் எடுத்தியம்புவதுடன் முல்லை நிலத்திற்குரிய உரிப்பொருளையும் எடுத்தியம்புகின்றது.

தோழிக்கூற்று வாயிலாக தலைவி ஆற்றியிருந்தது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தலைவி தன் ஆற்றாமையை எண்ணி மயங்கி, நடுங்கி, கைகளிலிந்து நெகிழ்கின்ற வளைகளைத் திருத்தி துயருற்று வருந்தும் தன் நெஞ்சினைத்தானே தேற்றுகின்றாள்.

இன்றுயில் வதியுநற்காணாள் துயருழந்து

நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு

நீடுநினைந்து தேற்றியும் ஓடுவளை திருத்தியும்
மையல் கொண்டும் ஓய்யென உயிர்த்தும்
ஏவுறு மஞ்ஞையின் நடுங்கி இசை நெகிழ்ந்து (80-84)

இதில் தலைவனது வரவை எதிர்நோக்கித்தன் நிலைமறந்து தனிமையில் வருந்துகின்ற தலைவி, தான் இப்படி வருந்துவது தலைவன் போருக்குச் செல்லும் போது அவனுக்குக் கொடுத்த வாக்கை மீறியது போலாகும் என்று நினைத்து தனக்குத் தானே ஆறுதல் கூறி ஆற்றியிருக்கின்றாள். முல்லைக்குரிய உரிப்பொருளான இருத்தலும் இருத்தல் நிமித்தமுமான உணர்வு வெளிப்பட்டிருப்பது முல்லைப்பாட்டின் தனிச்சிறப்பாகும்.

**முடிவுரை**

தொல்காப்பியம். நம்பியகப்பொருள் ஆகிய இலக்கண நூல்கள் சுட்டியுள்ள அகத்திணைச் சார்ந்த மரபுகளைப் பின்பற்றியே முல்லைப்பாட்டு அமைந்துள்ளது. அகத்திணை வகைமைகளான முதல், கரு, உரிப் பொருள் மட்டுமன்றி சுட்டி ஒருவர் பெயர் கூறாமல் அகத்திணை மரபுக்கு உட்பட்டு அமைந்துள்ளது. முல்லைத்திணைக் கோட்பாட்டுக்குரிய சிறந்த உதாரண நூலாக முல்லைப்பாட்டு விளங்குகின்றது.

**துணைநூற் பட்டியல்**

1. நச்சினார்க்கினியர் உரை. முல்லைப்பாட்டு. முதல்பதிப்பு. திருநெல்வேலி: தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1930.
2. இளம்பூரணர் உரை. தொல்காப்பியம் பொருளதிகாரம். முதல் பதிப்பு. சென்னை: சாரதா பதிப்பகம் 2005.
3. நாற்கவிராசநம்பி. அகப்பொருள் விளக்கம். முதல் பதிப்பு. கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை 1907.
4. ந.மு. வேங்கடசாமி நாட்டார். அகநானூறு. நான்காம் பதிப்பு. சென்னை: சைவசித்தாந்த நுற்பதிப்பு கழகம் 1980.
5. சாமி சிதம்பரனார். தமிழர் வாழ்வும் பண்பாடும். முதல் பதிப்பு. சென்னை: சாரதா பதிப்பகம் 2017.